தொழில்களை பெற்றுக்கொள்ள அவசியமான தொழிற்பயிற்சிகளை பெற்றுக்கொள்ள ஏற்பாடு களை மேற்கொள்ளல் மற்றும் உதவி செய்தல்;

(ஈ) இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்கள் மற்றும் எதிர்பாரா இழப்புகளின்போது நிவாரணங்கள் மற்றும் உதவிகளை ஏற்பாடு செய்தல்;

(உ) அநாதரவான மூத்த பிரசைகளுக்காக பலவித உபகார திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் அவர்களுக்கு அவசியமான உதவி உபகாரங் களை செய்தல்;

(ஊ) குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களின் சிறுவர்களது கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அவசியமான கல்வி உபகரணங்கள் மற்றும் உதவிகளை பெற்றுக் கொடுத்தல்;

(எ) ஏற்புடைய சட்டங்களின் பிரகாரம் காணி மற்றும் வீடுகள் அற்ற அநாதரவான குடும்பங்களுக்கு காணி மற்றும் வீடுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கட்டடப் பணிகள் நிறைவுபெறாத வீடுகளை கட்டிமுடிப்பதற்கு அவசியமான மூலப்பொருட்கள் மற்றும் ஏனைய உதவிகளை பெற்றுக்கொடுத்தல்;

(ஏ) அரசாங்க சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணக்கரு மற்றும் அறிவை மேம்படுத்துவதற்கு அவசியமான கருத்திட்டங்களை செயற்படுத்தல்;

(ஐ) நிறைவடையாத தேவைகள் உள்ள, அநாதரவானவர்கள் மற்றும் நோயாளர்களுக்கு உணவு, மூக்குக் கண்ணாடி, விழித்திரை கேள்விக் கருவிகள், முச்சக்கரங்கள், ஊன்றுகோள்கள் மற்றும் ஏனைய மருத்துவ உபகரணங்கள், உதவிகளை பெற்றுக்கொடுத்தல்;

